**காயல்பட்டினம் நகராட்சியின் 15.07.2021ம் தேதிய நகர்மன்ற அவசரகூட்டம்**

**மன்றப்பொருள்-1**

மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி அவர்களின் கடிதம் எண்.ந.க.எண்.டி5/30249/2019, நாள்-09.07.2021-ல், காயல்பட்டிணம் நகராட்சி பகுதிக்குட்பட்ட, காயல்பட்டிணம் வடபாகம் கிராமம் வருவாய் துறைக்கு சொந்தமான சாலை மற்றும் ஓடை புறம்போக்கு புல எண்கள் 175 மற்றும் 187 ஆகியன வழியாக DCW நிறுவனத்திற்கு குழாய் பதித்து தண்ணீர் கொண்டு செல்ல ஆட்சேபனை எதுவும் இல்லை என்பதனை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட மாவட்ட ஆட்சியரின் அறிவுரைப்படி, அவசர அவசியம் கருதி மேற்படி காயல்பட்ணடிம் வடபாகம் கிராமம் வருவாய் துறைக்கு சொந்தமான சாலை மற்றும் ஓடை புறம்போக்கு புல எண்கள் 175 மற்றும் 187 ஆகியன வழியாக DCW நிறுவனத்திற்கு குழாய் பதித்து, தண்ணீர் கொண்டு செல்வதற்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என தெரிவித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு பதில் அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கோப்பு எண்.ந.க.எண்.1569/2019/எப்1
அலுவலக குறிப்பு-
மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 2132 அனுமதிக்கப்படுகிறது**.

**ஜுலை 2021 மாத சாதாரண கூட்டம்**

**மன்றப்பொருள்-1**

தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டிணம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜேசிபி வாகனம் எண்.டி.என்.92பி 8679 நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து கனரக வேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே தற்பொழுது அதனுடைய பேட்டரி பழுதடைந்துள்ளதால் அதனை சரிபார்த்து வழங்குவதற்கு தகுதியான நபர்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை எடுத்திடவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.10,000/-த்தினை பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு-
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.165/2018/அ3
**தீர்மான எண் 2133 அனுமதிக்கப்படுகிறது**